1973 நவம்பர் 24]

Tourist Project between Mahabalipuram and Kovalam

@ * 70. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any financial assistance has been sought for under the United Nations Development Programme for a tourist project between Mahabalipuram and Kovalam; and

(*b*) if so, the details thereof?

மாமல்லபுரம்-கோவளம் ஆகியவற்றிற்கிடையே சுற்றுலாத் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாமல்லபுரம்-கோவளம் ஆகியவற்றிற்கிடையே சுற்றுலாத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதி உதவி ஏதும் கோரப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இப்பகுதியை மேம்படுத்த நிதியுதவி அளிக்குமாறு மாநில அரசு இந்திய அரசினை வலியுறுத்தி வந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டக் குழுவின் அறிக்கையைப் பொறுத்து இதற்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

Watchmen in Tourist Bungalows

*94. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of persons who are employed as watchmen in Tourist Bungalows in our State;

(*b*) the number among them have not yet been confirmed;

(*c*) for how long they have not been confirmed; and

(*d*) the action proposed to be taken by the Government regarding them?

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

பயண மாளிகையிலுள்ள காவலாளிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயண மாளிகை காவலாளிகள் நமது மாநிலத்தில் எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களில் எத்தனை பேர் நிரந்தரமாக்கப்படாத நிலையிலுள்ளனர் ?

(உ) எத்தனை ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படவில்லை ?

(எ) அவர்களைப் பொருத்து என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) பொதுப்பணித் துறையில் உள்ள பயண மாளிகைகளில் தற்போது மொத்தம் 82 காவலாளிகள் உள்ளனர்.

(இ), (உ) & (எ) அவர்களில் 18 காவலாளிகள் 24--11--1970 முடிய ஐந்தாண்டுகள் நிறைவாக பணியாற்றுமல் இருந்ததால் நிரந்தரப்பணி உரிமை பெறும் பணியாளர் தொகுதியின் கீழ் அவர்களைக் கொண்டுவர இயலவில்லை. 24—11—70-க்குப் பிறகு ஐந்தாண்டுகள் பணியாற்றிய வேலை முன்னீட்டுப் பணியாளர்களை நிரந்தரப்பணி உரிமை பெறும் பணியாளர் தொகுதியின் கீழ் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எந்தச் சம்பள விகிதத்தில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I do not have the details.

Order of Precedence for Occupation of Inspection Bungalows, etc., under the control of Public Works Department for the Members of Legislature and Parliament

* 95. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that Members of State Legislature and Members of Parliament are placed below the Gazetted Officers of the Revenue Department in the order of precedence